# மின்நிலா

ஜூலை 20, 2020



engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

**இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**

**நன்றி.**

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020

படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

மின்நிலா 008 (முந்தைய இதழ் சுட்டி)

## பொருளடக்கம் பக்கம் எண்

லச்சா பராத்தா - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி........ 2
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்........ 6
சிறுகதை : புதுமைப் பெண்களடி -- ஜீவி........ 8
கேள்வி பதில்........16
கபசுரக் குடிநீரும் கடும் வயிற்று வலியும்: ஸ்ரீராம்........ 20
பலசரக்கு : ஸ்ரீராம்........ 27
வாசகர் விளம்பரம் பானுமதி வெங்கடேஸ்வரன்........ 35
நினைவலைகள் : kayjee........ 38
மடியில் நான் துயில இடை துவள கலை பயில : சி பா ர - ஸ்ரீராம்........ 39
அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி........42
சுவாரஸ்ய மனிதர்கள் By kgg........ 49
பாசிடிவ் செய்திகள்........ 52
காற்றையும் பதம் பார்க்கும் கோவிட்-19: ரமா ஸ்ரீநிவாசன்........ 56
புத்தக விமரிசனம் : KG கௌதமன்........ 63

(குறிப்பு : நீல நிற தலைப்பு கொண்ட பகுதிகள் மின்நிலாவில் மட்டுமே வெளியிடப்படுவன )

# லச்சா பராத்தா - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி



**தேவையான பொருள்கள்:**

கோதுமை மாவு – 2 கப்
உப்பு – தேவையான அளவு
காரப்பொடி – 2 டேபிள் ஸ்பூன்
தனியா பொடி – 2 டேபிள் ஸ்பூன்
கசூரி மேத்தி – சிறிதளவு



செய்முறை:

முதலில் கோதுமை சாதாரணமாக சப்பாத்தி செய்வதற்கு பிசைவது போல் பிசைந்து கொள்ளவும். அரை மணி நேரம் கழிந்ததும், சற்று பெரிய சப்பாத்தியாக பரத்தி அதன் மீது காரப் பொடி, தனியா பொடி, கசூரி மேத்தி இவைகளோடு கொஞ்சம் உப்பு பொடியையும் சீராகத் தூவி, அந்த சப்பாத்தியை அங்கவஸ்திரத்தை விசிறி மடிப்பாக மடிப்பது போல் மடிக்க வேண்டும்.


மசாலாவைத்
தூவி, மடக்கி, …




அதாவது முதலில் ஒரு ஓரத்தை சற்று பெரிதாக உள் புறமாக மடித்து விட்டு பின்னர் அதையே பின்புறமாக மடிக்க வேண்டும். இப்போது இரண்டு மடிப்புகள் வந்து விடும். பின்னர் அந்த இரண்டு மடிப்புகள் கொண்டதை நீளமாக உள்புறம் மடித்து, அதில் பாதியை பின்புறமாக மடிக்க வேண்டும். இப்படி மடித்தால் இறுதியில் ஒரு நீள கயிறு போல வரும் அதை சுருட்டி, பின்னர் அப்படி சுருட்டப்பட்டதை சப்பாத்தியாக பரத்தி தவாவில் இரண்டு புறமும் நெய் விட்டு வாட்டி எடுத்தால் லேயர் லேயர் இருக்கும் லச்சா பராத்தா கிடைக்கு ம். இம்லி சட்னி (புளி சட்னி)அல்லது தயிரோடு சாப்பிடலாம்.

>>> [வீடியோ சுட்டி]

வெங்கட் நாகராஜ்: : படங்கள் நன்று. குறிப்பும் நன்று. ஒரே ஒரு திருத்தம் - லாச்சா அல்ல - லச்சா! சுருள் சுருளாக வரும் இந்த பராட்டாவின் பெயர் லச்சா பராட்டா.

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




LINK :

INDIA : [https://www.amazon.in/dp/B08CXBPPYN](https://www.amazon.in/dp/B08CXBPPYN)

US : [https://www.amazon.com/dp/B08CXBPPYN](https://www.amazon.com/dp/B08CXBPPYN)

UK :[https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN](https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN)



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# சிறுகதை : புதுமைப் பெண்களடி -- ஜீவி

" என்ன, நீங்க பீடி பிடிப்பீங்களா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டாள் வித்யா.

சற்றுமுன் முன் மூக்கைச் சுளித்தபடி வெளியே போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்த அவன் முகப்பக்கம் வந்து வந்து மோப்பம் பிடிக்கும் தோரணையில் அவள் ஆராய்ந்ததின் அர்த்தம் இப்பொழுதுதான் அவனுக்கு உறைத்தது. 'பீடி' என்று அவள் சொன்னது வேறு அவன் அந்தஸ்த்தை அதல பாதாளத்தில் தள்ளியது போலிருந்தது அவனுக்கு.

"பீடி இல்லை; சிகரெட் பழக்கம் உண்டு" என்று கூலாகச் சொன்னான் சுரேஷ்.

"பீடி, சிகரெட், சுருட்டு--- எந்தச் சனியனா இருந்தா, என்ன?.. எல்லாம் ஒன்றுதான்... ஏங்க உங்க புத்தி இப்படிப் போறது?" என்று விரோதத்துடன் அவனைப் பார்த்து முறைத்தாள் அவள்.

தனிப்பட்டத் தாக்குதலைத் தாங்காது நிலை குலைந்து போனான் சுரேஷ். 'கல்யாணம் ஆகி முழுசாக நாலு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் இவள் அட்டகாசம் இவ்வளவா' என்று அவன் மனம் குமைந்தது. இதற்குப் பயந்து விடக்கூடாது என்று ஆணின் பௌருஷம் மனசில் மூர்க்கமாய்த் தலைதூக்கியது.

"எல்லாம் உங்கள் நல்லத்துக்குத்தான் சொல்றேன்.." என்று பவ்யமாய் சொன்னாள் வித்யா. அவள் பணிவு இன்னும் இவன் ஆத்திரத்தைக் கூட்டியது. "என்ன பொல்லாத நல்லதுக்கு?" என்று சீறினான்.

**"புதுசா உங்களுக்குத் தெரியாததை என்ன சொல்லிடப் போறேன்?. 'புகை பிடிக்கிறது, உடல் நலனுக்குக் கேடு'ன்னு நீங்க பிடிக்கற பீடி பாக்கெட் மேலேயே எழுதியிருக்கறது கண்ணுக்குப் படலயா?"**

**"பீடி இல்லே, சிகரெட்" என்று உறுமினான் சுரேஷ்.**

**"சரி. எதுவோ ஒண்ணு.. சிகரெட்ன்னா ஒண்ணும் உசத்தி ஆகிடப்போறதில்லே.. உங்க அந்தஸ்த்தும் அதுனாலே ஒண்ணும் உசந்திடப்போறதில்லே..." என்று ஏற்கனவே எரியற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாள் வித்யா.**

**"சிகரெட் பிடிச்சா வியாதி வரும்னா, அப்போ சிகரெட் பிடிக்காதவனெல்லாம் எந்த வியாதியும் இல்லாம இருக்காங்கங்கறையா?"**

**"இதோ பாருங்க.. இப்படி விதண்டாவாதம் செய்யறதை விட்டு விஷயத்தை புரிஞ்சிக்கங்க.. வியாதியே இல்லாத, மனுஷரில்லை.. ஒத்துக்கறேன். அதுவா வர்றது ஒண்ணுன்னா, நாமே ஏன் வரவழைச்சிக்கணும்ங்கறது தான் என்னோட கேள்வி.. கான்ஸர் அது இதுவென்று பெரிய வியாதியெல்லாம் வந்து நானும், நாளைக்கு நமக்குப் பொறக்கப் போற குழந்தையும் கண்கலங்கி நிக்கணும்ங்கறீங்களா? ஆஸ்பத்திரி சார்ஜெல்லாம் சகட்டுமேனிக்கு எகிறிப்போயிடுச்சு, தெரியுமில்லையா?.. நாலு காசு சம்பாதிக்கறைச்சேயே, பெரிய சிந்தனாவாதி மாதிரி இப்படி ஊதிகிட்டு ஆட்டம் போடற வேலையை விட்டுட்டு, எந்த வியாதி வருமோன்னு பயந்திண்டு இப்பவே அதுக்கும் சேர்த்து சம்பாதிக்கற வழியைப் பாருங்க.. அதுதான் புருஷ லட்சணம்..தெரிஞ்சிக்கங்க.."**

"ஏய்! என்ன அதிகமாப் பேசறே?"-- என்று வேகமாக ஆரம்பித்தவன், வித்யாவின் வழுவழுப்பான வட்ட முகத்தின் அழகை நேர்கொண்டதும், சுருதி குறைந்து சுருண்டு போனான்.. அதிக அலட்டல் அவளது அசூயையைக் கூட்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. இவளை சாகஸமாக சமாளிக்க வேண்டும் என்று கணக்கு போட்டவன், "உங்க அப்பா உதடைப் பார்த்தா சிகரெட் பிடிக்கற மாதிரித் தெரியுதே?" என்று சுற்றி வளைத்து ஆரம்பித்தான்.

"என்ன உளர்றீங்க?.. இது என்ன உதடு ஜோஸ்யமா?"

"வித்யா! கூல்.. ரொம்ப எகிறாதே!.. அகத்தின் அழகு முகம் காட்டும் என்பாங்க.. அதே மாதிரி சிகரெட் சமாச்சாரத்திலும் ஒரு சீக்ரெட் இருக்கு.. இழுக்க இழுக்க இன்பம்ன்னாலும், இறுதிலே வெள்ளை வெள்ளையா உதட்லே படியற நிகோடின் திட்டை மறைக்க முடியாது. தெரிஞ்சிக்கோ.."

"தெரியுதுலே.. பின்னே ஏன் இதைக் கட்டிண்டு அழறீங்க.." என்று அவனை மடக்கியவள், எச்சரிக்கும் தொனியில் தொடர்ந்தாள்: "தாலி கட்டின பெண்டாட்டி வேணுமா, இல்லே இந்த சிகரெட்டோடையே வாழ்க்கை நடத்தலாமான்னு நீங்களே தீர்மானிசிக்கங்க.." என்று கோபத்துடன் சொல்லியபடியே கட்டிலிலிருந்து எழுந்தாள்.

"ப்ளீஸ்..ப்ளீஸ்.. வித்யா..ஒரு நிமிஷம்.." என்று பற்றியவனின் கரத்தை உதறினாள் அவள்.."எனக்கு உங்க பக்கத்லே வந்தாலே குமட்டிண்டு வர்றது..சீச்சீ.. என்ன நாத்தம்?.. நாலு வார பழக்கத்திலே இன்னிக்குத் தான் தெரிஞ்சது உங்களோட இந்த லட்சணம்.. இப்படியே போச்சுனா நான் வாந்தி எடுத்தே செத்திடுவேன்.."

"பழகிடும், வித்யா!.. சொன்னாக் கேளு.. என்ன, உங்க அம்மா பழகிக்கலையா?"

"அடச்சீ.. இன்னொரு தடவை எங்கப்பாவை இழுத்துப் பேசாதீங்க..தெய்வம் அவர்.. தெரிச்சிக்கங்க.. நாலு வருஷம் முன்னாடி ஆட்டோலே போகறச்சே, ஒரு ஆக்ஸிடெண்ட்.. உதடு கிழிஞ்சு, தையல் போட்டு..அதெல்லாம் உங்ககிட்டே என்ன விளக்கம் வேண்டியிருக்கு.." என்று வித்யா அதிர்ந்தாள்.

அவன் அசரவில்லை என்று தெரிந்ததும் சீறினாள்: "தீர்மானமாச் சொல்றேன்... என்னாலே இந்த நாத்தத்தைச் சகிச்சிக்க முடியாது.. சிகரெட்டா, நானான்னு நீங்களே தீர்மானிசிக்கங்க.."என்று படீரென்று கதவு சாத்திக் கொண்டு சென்றாள்.

மாமனார் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்த மழமழ கட்டில். மெத்து மெத்து ஸ்லீப்வெல் மேட்ரஸ். கொஞ்ச நேரத்திற்கு முன் அவள் வாளிப்பான உடல் எந்த இடத்தில் சாய்ந்து படுத்திருந்ததோ அந்த இடத்தில் புஜம் பட்டதற்கே சொக்கிப் போனான் அவன். சிகரெட்டும் இன்னொரு சொக்கல் தான். இந்த இரண்டில் எதை இழக்கவும் அவன் மனம் இணங்கவில்லை. இரண்டையும் தக்க வைத்துக் கொள்ளவதற்கு சாதுர்யமான நடவடிக்கை ஏதாவது உண்டா என்று மனம் யோசித்தது.

சுரேஷ் குழம்பினான். இந்த ஜென்மத்தில் சிகரெட்டைப் பிடிக்காமல் விட்டு விட முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. 'எப்படியாவது இவளைச் சரிப்படுத்த வேண்டும். நாற்றம் என்கிறாளே?..என்ன ஜென்மம் இவள்?.. இந்த வசீகர வாசனையை அவளுக்கும் பழக்கப்படுத்துவதே

ஒரே வழி; அதை ஒரு தரம் அனுபவித்து விட்டாளானால், எல்லாம் சரியாகப் போய்விடும்' என்று நினைத்தான்.

பாண்டிபஜாரில் ஃபாரின் சரக்குகள் விற்கும் பகுதியில் மேற்கத்திய பெண் ஒருத்தி சிகரெட் பிடிக்கும் தோரணையில் படம் போட்ட சிகரெட் டப்பா ஒன்றைப் பார்த்தது அவன் ஞாபகத்தில் பதிந்திருந்தது.. அந்த மாதிரி சிகரெட்டில் எல்லாம் சுகந்த மணம் கமழும் என்று இந்த மாதிரி விஷயங்களில் கைதேர்ந்த நண்பன் ஒருவன் சொன்னது நினைவுக்கு வந்தது.. அதை வாங்கி புகைத்தால் போயிற்று என்று நினைப்பு ஓடி வேறு என்னன்னவோவாக வடிவெடுத்தது.

அடுத்த நாளுக்கு அடுத்த நாள்.

ஆபிஸ் விட்டு வீடு திரும்பிய சுரேஷுக்கு வீட்டு வெளி ஹாலிலிலேயே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

வித்யா சோபாவில் அமர்ந்து எதிரில் உட்கார்ந்திருக்கும் யாருடனோ ரொம்ப சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்த அவனைப் பார்த்து முகம் மலர்ந்தவள், அந்நிய ஆடவனை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். "சுரேஷ்! இவர்தான் மிஸ்டர் ஸ்ரீகாந்த்! நான் வேலை செஞ்ச கம்பெனிலே என்னோட ஒண்ணா ஒர்க் பண்ணினவர்.. இவர் அவசரமா கம்பெனி வேலையா டூர் போகவேண்டியிருந்ததனாலே, நம்ப கல்யாணத்திற்கு கூட வரமுடியாம போயிடுத்து."

"ஐ..ஸீ.." என்று ஒரு இழுப்பு இழுத்த சுரேஷ், ஸ்ரீகாந்தின் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, அவனை லேசாக ஆராய்ந்தான்.

கொழுகொழுவென்று கோயில் காளை போல அரும்பு மீசையும் அதுவுமாக அம்சமாக இவனை விட அழகாக அவன் இருந்தது வேறு இவனுள் எரிச்சலை அதிகப்படுத்தியது. இருந்தாலும், வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "ஓகோ.." என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தான்.

வித்யாவே தொடர்ந்தாள்: "சுரேஷ்! ஸ்ரீகாந்த் வெரிகுட் ஜெண்டில்மேன்.. பழகறத்துக்கு ரொம்ப ரொம்ப இனிமையானவர்.. இவரது நடவடிக்கைகள் பலது என்னை ரொப்பவே இம்ப்ரஸ் பண்ணும்..இதில் விசேஷம் என்னன்னா, இவரும் பல விஷயங்களில் என்னைப் போலவே. எனக்குப் பிடிக்காதது பலதும் இவருக்கும் பிடிக்காது.. குறிப்பா சொல்லணும்னா, ஒரு சின்ன ஒற்றுமையைச் சொல்லலாம்.." ஒரு நிமிஷம் நிறுத்தித் தொடர்ந்தாள் வித்யா...

"எங்க ரெண்டு பேருக்குமே சிகரெட் பிடிக்கறவங்களைக் கண்டா அறவே பிடிக்காது.... யாராவது பத்த வைச்சா, நாங்க ரெண்டு பேருமே எழுந்து தூரப் போயிடுவோம். அவ்வளவு ஒற்றுமை எங்க ரெண்டு பேருக்கும்.."" என்று கலகலவென்று சிரித்தாள்.

சுரேஷூக்கு விளக்கெண்ணெய் குடித்தமாதிரி முகம் கோணிற்று. ஜிவுஜிவுவென்று சிவந்த முகத்தை மறைத்துக் கொள்ள, "ஒரு நிமிஷம்--முகம் அலம்பி வருகிறேன்" என்று உள்ளே போகத் திரும்பின்னான்.

அவன் பாத்ரூம் பக்கம் போய்விட்டதை நிச்சயப்படுத்திக் கொண்டு "என்ன ஸ்ரீகாந்த்! ஏதோ தொலைக்காட்சி சீரியல்லே நடிக்கப்போறதா சொன்னீங்க..ஷூட்டிங் ஆரம்பிச்சாசா?" என்றாள் வித்யா.

"அட்வான்ஸ் பணம் கூட வாங்கிட்டேன், வித்யா!.. என்னை மதிச்சு ஆக்ட் பண்ண நீங்களும் ஒரு துண்டு வேடம் கொடுத்திட்டீங்க.. இந்த அனுபவத்திலே நிஜ ஷூட்டிங்னு வரும் பொழுது ஜமாச்சிடமாட்டேனா?.. இப்போ சொல்லுங்க..எப்படி என் ஆக்டிங்?"

"பிச்சு உதறிட்டீங்க..'செவசெவ'ன்னு மூஞ்சி போன போக்கைப் பார்த்தபோதே, மனுஷர் திருந்திடுவார்ன்னு எனக்குத் தெரிஞ்சுபோயிடுத்து.. தேங்ஸ் அ லாட் ஸ்ரீகாந்த்!"

"இப்படி ஒரு ஆக்ட் கொடுக்க சந்தர்ப்பம் கொடுத்ததுக்கு நான் தான் தேங்ஸ் சொல்லணும்.. என்னை எங்கே பேசவிட்டீங்க?... நீங்களே சமாளிச்சு தூள் கிளப்பிட்டீங்களே?"

"எல்லாம் சொந்த வயித்துவலி ஸ்ரீகாந்த்!.. ஆரம்பத்திலேயே இப்படி ஒரே போடா போட்டு வழிக்குக் கொண்டுவர்லேன்னா, பின்னாடி 'அம்மா,அப்பா'ன்னு அவஸ்தைப்படறது யாரு?.. இது ஹெல்த் சமாச்சாரமில்லையா?.. ஒரு குடும்ப நலனே இதுலே ஊசலாடிக் கொண்டிருக்கு இல்லையா?.. அதான் அப்படி ஒரு கடுமையான 'டோஸா' கொடுக்க வேண்டியதாயிடுத்து.. .... ஓ.கே..ஸீ..யூ..ஸ்ரீகாந்த்!.. தேங்ஸ்.."

"நான் தான் சொல்லவேண்டும். எனக்கு ஒரு சான்ஸ் கொடுத்ததுக்கு, தேங்ஸ்." எழுந்து செருப்பு மாட்டிக்கொண்டு வெளியே போகிறவனை நன்றியுடன் பார்த்தாள், வித்யா.

அடுத்த நாள் காலையில் சுரேஷ் விரலுக்கிடையில் எதையோ இடுக்கியபடி, யோசித்தவாறு ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

"ஆபிஸ் கிளம்பலையா?" என்று ஹாலுக்கு வந்த வித்யா, "என்னங்க, கையிலே? சாக்பீஸா?..எதுக்கு இது?" என்று ஆச்சரியம் காட்டினாள்.

"வித்யா! ரெண்டு நாளா சிகரெட்டைத் தொடவே இல்லே. அதுக்குப் பதிலாத்தான் இந்த சாக்பீஸ்.. சிகரெட்டைக் கையிலே வைச்சிருக்கிற மாதிரியே இருக்கு.. எல்லாம் அந்த சனியனை மறக்கத்தான்.. நீயே பாரேன்.. போகப்போகச் சரியாயிடும்.. நானும் ஸ்ரீகாந்த் மாதிரி, உனக்குப் பிடிச்ச மாதிரி..." என்று அதற்கு மேல் வார்த்தை வராமல் தடுமாறுபவனின் கற்றை நெற்றிக் குழலைக் கோதி விட்டாள், வித்யா. .




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கேள்வி → பதில்

சிந்தனையாளர்களும் படிப்பும் ...

**கில்லர்ஜி:**

**வாசிப்பு என்பது விரிவான சிந்தனையாளனுக்கு இருக்க வேண்டிய சிறப்பு அம்சம். சிலர் சிலரது இடங்களில் வாசிக்காதது அவர்கள் தாம் உயர்ந்தவர்கள் என்ற குறுகிய எண்ணப்பாடுகளுடன் வாழ்பவர்களா ?**

**# வெறும் வாசிப்பு மட்டுமே சிறந்த சிந்தனைகளை உருவாக்க இயலாது. எதைப் படிக்கிறோம் என்பது முக்கியம். ஒருவர் நல்ல படைப்பை எப்படி அடையாளம் காண இயலும் ? படைப்பாளியின் பெயர் பிரபலமாக இருந்தால் படிக்க உந்துதல் இருக்கும். இல்லையானால் நண்பர்கள் சிபாரிசு நல்ல எழுத்துக்கு அறிமுகம் தரும்.**

**படிக்க ஏ...ராளமாகக் கிடைப்பதால் வாசகர் தன் அவகாசத்தைப் பங்கீடு செய்ய வேண்டி வருகிறது. எனவே படிக்க ஒதுக்கப் படும் கால அளவு மிக தாராளமாக இருப்பதோ , கிடைப்பது அனைத்தும் படிக்கப் படுவதோ அசாத்தியம்.**

**நல்ல சிந்தனையாளருக்கு படிக்கத் தேவை தனக்கு தெரிந்த மொழி, நல்ல படைப்பு மட்டுமா ? இல்லை தனக்கு பிடித்தவர்களா ?**

**# தனக்குத் தெரியாத மொழியில் படிப்பது எப்படி ? நல்ல படைப்பைக் கண்டு கொள்வது எங்ஙனம் ? பிரபலங்கள், தெரிந்தவர்கள் என்று ஆனால், தேடல் தேவையில்லை.**

நெல்லைத்தமிழன்:

இருவருக்கு இடையே போட்டி வரும்போது (அது கிரிக்கெட்டோ, இல்லை யுத்தமோ அல்லது எதுவோ) பொதுவாக நம் மனது யார் பலகீனமானவரோ அவர் வெற்றி பெறணும் என நினைப்பதும், பலகீனர் வெற்றி பெற்றால் சந்தோஷப்படுவதும் ஏன்?

$ பலகீனமானவரைத் தேர்ந்தெடுத்து அதி தேவதையாக்கும் முயற்சி?

# யார் வெற்றி பெற வேண்டும் என்று நாம் விரும்புவது நம் மனப்போக்கைச் சார்ந்தது. எல்லாரும் பலவீனர் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பதில்லை. தமது அபிமான நபர் வெற்றி அடைய வேண்டும் என்று சிலர் நினைப்பர். மீண்டும் மீண்டும் ஒருவரே வெற்றி அடையாமல் புதிதாக வருபவர் வெற்றி அடைய வேண்டும் என்று சிலர் நினைப்பார்கள். அதுபோக வயதில் இளையவர்கள், அழகில் மிக்கவர்கள் , என்று சில தகுதி படைத்தவர்கள் வெற்றி அடைய வேண்டும் என்று நேயர்கள் விரும்புவதும் இயற்கை. பார்க்கிறவர்கள் அனுதாபம் யார் பக்கம் எதனால் இருக்கிறது என்பதைப் பொறுத்து இது அமையும்.

ஆடம்பரத் திருமணங்களால் (இப்போ எல்லாத் திருமணமுமே, விசேஷமுமே இந்த ரகம்தான்) யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்?

$ ஆடம்பரம் என்பது நம் reaction. திருமணம் செய்து கொள்பவருக்கும், செய்விப்பவருக்கும், ஒரு முக்கியமான நாள். பெங்களூரு மாப்பிள்ளையும் திருநெல்வேலி மணப்பெண்ணும் அப்படி நினைத்ததாய் தெரியவில்லை. (The

reference is to Naraayanamurthy's son and Sivasailam's granddaughter when all the musical world turned out for the wedding concert)

# நிச்சயமாக கேட்டரிங் காண்ட்ராக்டர்களுக்கு லாபம். மெல்லிசைக் குழுக்களுக்கு லாபம்.

பெரிய இடத்து திருமணம் ஆயிற்றே என்று மிகவும் செலவு செய்து பரிசுப் பொருள்களை எடுத்துக் கொண்டு நன்றாக உடுத்திக் கொண்டு கல்யாணத்திற்குப் போகிறவர்களுக்கு நேரம் , காசு நஷ்டம்.

புதன் 'புதுசு'

அடுத்த புதன் பதிவில் ஒரு வித்தியாசமான முயற்சி செய்யலாம் என்று ஒரு யோசனை.

அது என்ன?

இதோ :

உங்களுக்குத் தெரிந்த ஒரு தமிழ்ப் பழமொழி அல்லது தமிழ் சினிமா பெயர் - இதை dumb charades முறையில் - அதாவது வாய் பேசாமல் அபிநயம் மட்டும் பிடித்து, அதை சிறு வீடியோவாக எங்களுக்கு அனுப்புங்க.

அந்த வீடியோ சைலண்ட் வீடியோவாக மட்டுமே இருக்கவேண்டும்.

விடையை எங்களுக்கும் சொல்லவேண்டாம்.

வீடியோவைப் பார்க்கும் வாசகர்கள், அவர்களுடைய பதிலை கருத்துரையில் பதிவு செய்யும்போது, சம்பந்தப்பட்ட பதிவாளர் - பதில் சரியா இல்லையா என்று கருத்து சொல்லலாம்.

வீடியோவில் நடிப்பவர் யார் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நீங்களோ அல்லது உங்கள் உற்றார் / உறவினர் / நண்பர் யார் வேண்டுமானாலும் நடித்து எடுக்கப்பட்டிருக்கலாம்.

வீடியோ கிளிப் - கௌதமன் / ஸ்ரீராம் வாட்ஸ் ஆப் எண்ணுக்கோ அல்லது engalblog@gmail.com மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கலாம்.
சந்தேகம் எதுவும் இருப்பவர்கள் இந்தப் பதிவில் பின்னூட்டம் பதிவு செய்யவும்.

நன்றி.




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கபசுரக் குடிநீரும் கடும் வயிற்று வலியும்: ஸ்ரீராம்

சில நாட்களாகவே அவ்வப்போது வயிற்று வலி வந்து படுத்த ஆரம்பித்தது. எனக்கு வயிற்றுவலி வருவது கொஞ்சம் அபூர்வம். கொரோனா கால உலக நியதிப்படி இதற்கும், எனக்கும் பயம் வந்தது!

என்னிடமே வேறு சில நண்பர்களும் தனக்கு வயிற்று வலி இருப்பதாகச் சொல்லவும் எனக்கும் ஆச்சர்யம் ப்ளஸ் பயம். எனக்கிருக்கும் அதே அறிகுறிகளை அவர்களும் சொன்னார்கள். அதாவது அவ்வப்போது, விட்டு விட்டு, குறிப்பாக ஏதாவது ஆகாரம் வயிற்றுக்குள் போட்ட உடன்...

மருத்துவர்களைக் கேட்டபோது 'நீங்கள் அநியாயத்துக்கு முன் எச்சரிக்கை என்ற பெயரில் நிறைய மருந்து எடுக்கிறீர்கள்... அது காரணமாக இருக்கலாம்' என்றார்கள்.

அப்புறம் விசாரித்ததில் அது உண்மை என்றும் தெரிந்தது. குறிப்பான குற்றவாளி கபசுரக் குடிநீர். அதைக் குடித்தவர்கள் நிறைய பேர் - அதாவது கிட்டத்தட்ட 70% பேர்களுக்கு இந்த பாதிப்பு - அல்சர் ஆரம்பத்தொந்தரவு - இருக்கிறது என்று தெரியவந்தது. நிலவேம்பும் அப்படியே.

"அதற்காக அதை நிறுத்த முடியுமா" என்று கேட்டேன். 'வயிற்றுவலியா, உயிரா, எது முக்கியம்' என்று கேட்டேன். 'ஒன்றும் ஆகாது நிறுத்து' என்றனர்.

"அப்போ நிலவேம்புக் குடிநீர்?

" சின்ன மாறுதல் தவிர ரெண்டும் ஒண்ணுதான் செல்லம்... வேணாம் விடு.." என்றனர்.

"மாசத்துக்கு ஒரு தரம், மூன்று நாள் சாப்பிடறேன் அதனாலா பிரச்னை?" என்றேன். (அப்புறம் வாரத்துக்கு இரண்டு வேளை சாப்பிட்டு வந்தவர்களும் இருக்கிறார்கள், தினமுமே ஒருதரம் அல்லது இரண்டு தரம் இதைத் தொடர்ந்து குடித்து வருபவர்களும் இருக்கிறார்கள்)

"நிறுத்தினா நிறுத்து... இல்லாட்டா போ" என்று போனைக் கட் செய்து விட்டனர்!

பதினைந்து நாட்களுக்கு Pan D எடுக்க அறிவுறுத்தப் பட்டுள்ளேன்.

என் விஷயத்தில் இன்னொரு விஷயம் என்ன என்றால், காலை வெறும் வயிற்றில் ஐந்து மிளகும், கல் உப்பு அதே அளவும் சாப்பிடும் பழக்கத்தையும் ஆரம்பித்திருந்தேன்.

அது மட்டுமல்லாமல் இஞ்சி... வெவ்வேறு ரூபங்களில் தினமும் இஞ்சி உள்ளே சென்று கொண்டிருந்தது. ரசத்தில், - இதில் மிளகும் சேரும் - டீயில், அப்புறம் புளி இஞ்சி போட்டு அதைத்தொட்டுக்கொண்டு...

அப்புறம் தொண்டைக் கரகரப்பு, இருமல் என்றால் (இல்லாவிட்டாலும்) பாலில் மிளகு, பனங்கற்கண்டு போட்டு) ஓரிருமுறை குடிப்பேன்.

இந்நிலையில் தினமலரில் இந்தச் செய்தியையும் படித்தேன். ஆஹா... நேரம் பார்த்துதான் வருகிறது... அப்போ இது தமிழகத்துக்கே வந்த பிரச்னை போல!

பொதுவாகவே அலோபதி, ஹோமியோபதி சித்தா மருத்துவர்கள் யாருக்கும் ஒன்றும் சரியான ஐடியாவே இல்லாமல் ஆளுக்கு ஒரு கருத்தை வாரி வழங்குகின்றனர்.

உதாரணங்களாக முதலில் ஹைடிராக்சி குளோரோக்குவின் மாத்திரை சாப்பிடச் சொன்னார்கள். அதனால் பெரிய உபயோகம் இல்லை என்று பின்னால் தெரியவரும்முன் இந்த மாத்திரையையே இவர்கள் சாப்பிடச் சொன்ன அளவு வெவ்வேறாக இருந்தது.

முதல் நாள் 400 மிகி இரண்டு வேளை , பின்னர் 13 நாட்கள் இரண்டு வேளை 200 மி.கி சிலர் ஐந்து நாட்களுக்கு 200 மி கி என்றனர். சிலர் முதல் மூன்று நாட்கள் முதல் நாள் இரண்டு வேளை 400 மி கி, அடுத்த இரண்டு நாட்களுக்கு 200 மி கி என்று சொல்லி, பின்னர் எட்டு வாரங்களுக்கு வாரத்துக்கு ஒருமுறை இரண்டு வேளை 200 மி கி என்றனர். சிலர் வாரத்துக்கு ஒருமுறை 400 மி கி இரண்டு வேளை என்றனர். முதலில் இந்த மாத்திரையுடன் க்ளோரோக்வின் மாத்திரையும் சொல்லப்பட்டு வந்தது. நல்லவேளை, இதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை.

ரேடியோ ஸ்டேஷனைத் கேட்டு சமையல் செய்யும் கதாநாயகன் நினைவு வருகிறது! கதாநாயகி வெவ்வேறு ஸ்டேஷன்களைத் திருப்ப உடற்பயிற்சியும் சமையலும் மாறி மாறி வரும்.

அடுத்த ஹோமியோபதி ஆர்செனிக் ஆல்ப் 30 என்கிற மாத்திரை. ஆபத்தில்லாதது என்று சொன்னாலும், மருந்துக்கு கலவையில் ஆர்செனிக் அளவு மீறினால் ஆபத்து என்ற கருத்தும் சொல்லப்பட்டு வந்தது.

இதுவும் மாதத்துக்கு ஒருமுறை மூன்று நாட்கள் தொடர்ந்து காலை வெறும் வயிற்றில் ஆறு மாத்திரை என்றது ஒரு அரசு (ஆயுஷ்) விளம்பரம். இன்னொரு விளம்பரம் ஐந்து என்றது. அப்புறம் ஒரு மாதம் கழித்து மறுபடி மூன்று நாட்கள் என்றது அதே விளம்பரம்.

ஒரு வீடியோவில் குஜராத்தில் இரண்டு வேளை தொடர்ந்து காவல்துறைக்கு கொடுக்கப்பட்டதாகவும் அதனால் அவர்களுக்கு வைரஸ் தாக்கம் இல்லவே இல்லை என்றும் சொன்னது.

வந்தார் இன்னொரு ஹோமியோபதி இளம் பெண் மருத்துவர். அவர் ஒரு வீடியோ வெளியிட்டார். மூன்று நாட்களுக்கு நான்கு மாத்திரை, காலை வெறும் வயிற்றில், பின்னர் வாரா வாரம் இதைத் தொடங்கிய கிழமையில் மட்டும் நான்கு மாத்திரைகள் அதே போல் என்றார். ஒரு ஹோமியோபதி மருத்துவமனையில் இரண்டு வேளை இதைச் சாப்பிடச் சொன்னார்கள் என்று இரண்டு வேளை சாப்பிட்டு வருபவர்களும் உண்டு.

கபசுரக்குடிநீரும் அதே போல மாதத்தில் மூன்று நாட்கள் மட்டும் என்றும், வாரத்துக்கு இரண்டுதரம் என்றும், காலை ஆகாரத்துக்குப்பின் என்றும், காலை வெறும் வயிற்றில் என்றும், தினமும் ஒரு தரம் என்றும் விதம் விதமாக உபதேசிக்கப்பட்டு அதே போல ஒவ்வொருவரும் ஒரு மாதிரி பின்பற்றுபவர்களுக்கு உண்டு.

நடுவில் சித்தா மருத்துவமனை பற்றி இப்படியும் செய்தி உண்டு.

'அது'வா, நம்மோடு ஒரு செஸ் விளையாட்டை விளையாடி வருகிறது. சளி, இருமல், காய்ச்சல்தான் அறிகுறி என்றனர். இந்தியாவில் "இதெல்லாம் எங்களுக்கு

**சகஜமப்பா" என்றிருக்க, 'அது' வேறு ரூபங்கள் எடுக்கத் தொடங்கியது (என்று சொன்னார்கள்). ஜுரம், தலைவலி, கைகால் வலி உடல் அயர்ச்சி என்று அறிகுறிகளை 'அது' கூட்டிக்கொண்டே போனது.**

**நம்முடைய ஒவ்வொரு மூவுக்கும் 'அது'வும் செக் வைத்துக்கொண்டே வந்தது. மிளகா சாப்பிடுகிறாய், கபசுரக் குடிநீரா குடிக்கிறாய், இஞ்சியா விழுங்குகிறாய்... இந்தா வயிற்று வலி, அல்சர், கேஸ்டிரைடிஸ்... இதெல்லாமும் என் அறிகுறிகளே என்று விளையாடுகிறது...**

**சென்னை மருத்துவமனைகளில் அறிகுறிகளுக்குத் தக்கவாறு ஜுரமாத்திரை, இருமல் மாத்திரை, இந்தக் கபசுரக் குடிநீர், ஏதோ கஷாயம், சுண்டல், சமயங்களில் ஆயுர்வேத மாத்திரை தருவதாகக் கேள்விப்பட்டேன்.**






**தஞ்சை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நண்பர் ஒருவருக்கு Tamiflu மாத்திரை ஐந்து நாட்களுக்கு வழங்கப்பட்டதாகச் சொன்னார். அதனுடன் ஹைடிராக்சி குளோரோக்குவினும் தந்தார்களாம். Favipiravir போன்ற மாத்திரைகள் மார்க்கெட்டுக்கு வந்துவிடும், வந்தே விட்டது என்று சொன்னாலும் அதை யாரும் உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்த மாத்திரைக்கு விலை வைப்பதிலேயே குழப்பம் நிலவுகிறது போல.. 200 மி கி மாத்திரை 103 ரூபாய் என்றார்கள் விளம்பரத்தில். இரண்டு நாட்களுக்கு முன்பாக இதை 75 ரூபாய் என்று குறைத்திருப்பதாய் செய்தி சொல்கிறது. முதல் நாள் 1800 மி கிராமும், அப்புறம் தொடர்ந்து 13 நாட்களுக்கு 1600 மி கி மாத்திரையும் சாப்பிடவேண்டும் (பாஸிட்டிவ் என்று முடிவானவர்களுக்கு) என்று சொன்னார்கள். சாலிகிராமம் ஜவஹர் பொறியியற் கல்லூரியில் மருத்துவமனை வைத்திருக்கும் சித்த மருத்துவ மருத்துவமனையில் நன்றாகக் கவனிப்பதாகச் சொல்கிறார்கள்.**

**கபசுர குடிநீருக்கு இணையான அல்லது அதைவிட நல்ல மூலிகைக் கஷாயத்தை அவர் தருவதாகவும், அதன் செய்முறையை வெளிப்படையாக சொல்லி இருக்கிறார் என்றும் வாட்ஸாப்பில் செய்முறை பார்த்தேன்.**

எதையுமே அலட்சியமாகவும், ஏளனமாகவும் அணுகும் நண்பன் ஒருவன் எனக்கு உண்டு. அவனிடம் வேறு ஒரு விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தபோது இதைப் பற்றியும் பேச்சு வந்தது. "நீ என்ன பண்றே?" என்று கேட்டபோது பேஸ்புக்லயும், வாட்ஸாப்லயும் என்னென்ன கருமத்தை எல்லாம் சொல்றாங்களோ எல்லாத்தையும் சாப்பிட்டு வருகிறேன்" என்றான். பயந்திருக்கிறான் என்று தெரிந்தது.

இன்னொரு நண்பன்... இவன்தான் 'ஓவர் ஜாக்கிரதை உடம்புக்கு ஆகாது தம்பி" என்று என்னை முன்பே (வீட்டுக்கு திருடன் வரும் பதிவு) எச்சரித்தவன், அவன் இந்த மாதிரி எந்த எச்சரிக்கையையும் மேற்கொள்வதில்லை. அலுவலகம் விட்டு, அல்லது வெளியில் சென்று வந்தால் என்னைப்போல் (நம்மைப்போல்?!!) குளிப்பதில்லை, உடைகளை டெட்டால் தண்ணீரில் ஊறவைத்து காயப்போடுவதில்லை. கைகால் கூட கழுவுவதில்லையாம். 'வரணும் என்றிருந்தால் எப்படியும் வரும்... வராது என்றிருந்தால் எப்படியும் வராது...' என்று ரஜினி டயலாக் பேசுகிறான்!

உயிர் என்ன வெல்லமா? ஆ.... மா... ம் என்றுதான் தோன்றுகிறது. ரயில் வராது என்று தெரிந்தால் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து உயிரையும் விடுவேன் என்று வீர வசனம் பேசலாம். இது அப்படி இல்லையே...

இஞ்சியைக் குறைத்து, மிளகு குறைத்து, க சு கு நீரையும் (தற்காலிகமாக) விட்டபின் இப்போது எனக்கு வயிற்று வலி தேவலாம்! ஆனால் இன்னும் முழுதும் விடவில்லை.

அது சரி, தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டால் கூட அதை யு எஸ், யு கேயில் இருக்கும் பில்லியனர்கள், பணக்காரர்கள் போட்டுக்கொள்ள மாட்டார்களாமே... அப்படி ஒரு செய்தி வேறு உலவுகிறதாமே... உண்மையா?

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பலசரக்கு : ஸ்ரீராம்

**பாலச்சந்தர் - அவள் ஒரு தொடர்கதை - படாஃபட் பற்றி ஒரு செய்தி. இது நான் 2014 இல் பேஸ்புக்கில் பகிர்ந்த செய்தி.**

Sriram Balasubramaniam
June 22, 2014 at 8:31 PM

மக்கள், சமூகத்தில் எதை எல்லாம் கூடாது என்று சொல்கிறார்களோ அதையே (திரைப்படத்தில் காட்டும்போது) ரசிப்பார்கள். உள் மனசு ஒன்று கேட்கிறது, வெளி மனசு ஒன்று சொல்கிறது. 'ஹிப்பாகிரசி'தான் நம்முடைய பெரும் பலவீனம்.

பாலச்சந்தர் அவள் ஒரு தொடர்கதை படத்தை புது மாதிரியாகத்தான் எடுத்திருக்கிறார். அதிலே 'படாஃபட்' என்று சொல்லிக்கொண்டு ஒரு கதாபாத்திரம் வருகிறாளே, அந்த மாதிரி ஒரு காரெக்டர் நம் சமூகத்தில் இருக்கலாம். ஆனால் பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டு பத்துப் பேர் காது கேட்க ஒரு பெண் அப்படிப் பேசுவாளா என்பதுதான் எனக்குச் சந்தேகம். ஆனால் படம் நன்றாக ஓடுவதற்குக் காரணமே, நம்முடைய மக்களில் பெருவாரியானவர்கள் அப்படிப்பட்ட 'இம்மொராலிட்டியை' அனுமதிக்க ஆரம்பித்து விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.


- சொன்னது 'இதயம் பேசுகிறது' மணியன். அ.ஒ.தொ வெளியான சமயத்தில்!



**சமீபத்தில் ஒரு பழைய பைண்டிங்கில் இதே படாபட் விஷயமாய் தேங்காய் சின்னதாய் வருத்தப் பட்டிருந்ததை**

படித்தேன். படாஃபட் என்று அவர்தான் முதலில் எங்க மாமா படத்தில் சொன்னாராம். ஆனால் அவள் ஒரு தொடர்கதையில் ஜெயலட்சுமி சொன்னதும் அது பிரபலமாகி அவர் படாபட் என்றே அறியப்பட்ட நேரம். அவர் நடித்த கலியுகக் கண்ணன் பார்த்திருக்கிறீர்களோ? ரசனையான படம். தேங்காய் நிறைய சிவாஜியை இமிடேட் செய்திருப்பார் அந்தப் படத்தில். கௌரவம் படத்தில் சிவாஜி நடிப்பில் "கண்ணா நீயும் நானுமா? என்று டி எம் எஸ் பாடுவார். இந்தக் கலியுகக் கண்ணனில் தீர்ப்பு! "ஜெயிச்சுட்டே... கண்ணா நீ ஜெயிச்சுட்டே.." என்று அதே டி எம் எஸ் குரலில் தேங்காய் நடித்திருப்பார். ஆனால் பாடலின் வரிகளை வாலி நன்றாக எழுதி இருப்பார். வெள்ளி வீடியோவில் முன்பு பகிர்ந்திருக்கிறேன்.

இப்போது கீழே உள்ள படத்தில் அவர் சொல்லி இருக்கும் மூன்றாவது விஷயத்தில் வரும் 'அவர்' யார்? கிசுகிசு!



...ரிருக்க வேண்டும்."

## தேங்காயின் அங்கலாய்ப்புகள்:

1 நானல்லவோ முதல்
'ஃபடாஃபட்?

சமீபத்தில் ஒரு ரசிகர் என்னிடம்வந்து "'ஃபடாஃபட்' வார்த்தையை 'எங்க மாமா' படத்தில் நீங்கள்தானே முதலில் உபயோகப்படுத்தினீர்கள்?" என்று கேட்டார்.

ஆமாம். கதாசிரியர் குகநாதன் எழுதியிருந்த வசனப்படி நான்தான் அப்படிப் பேசி நடித்தேன். அந்தப் படத்தின் ஒரிஜினல் கதையான இந்தி 'பிரம்மசாரி'யில் நடிகர் மன்மோகன் இதே 'படாஃபட்' வார்த்தையைப் பலமுறை பயன்படுத்தி யிருக்கிறார். 'அவள் ஒரு தொடர்கதை'யில் அந்த வார்த்தை பெண்கள் வாயால் சொல்லப்படுவதால் ஃபேமஸாகிவிட்டது போலும்.(நான் இன்னமும் படம் பார்க்கவில்லை.)

2 இப்படியும் ஒரு
பொறுமையா?

கலியுகக் கண்ணனில் என் நடிப்பைப் பார்த்துவிட்டு ஒரு தினசரிப் பத்திரிகை என்னை சிறந்த நடிகர் என்று தேர்ந்தெடுத்தது. சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அப்பத்திரிகைக்குப் பெரிய அரசியல் தலைவர் ஒருத்தரை விட்டுப் போன் செய்யச் சொல்லி, 'எப்படிப் போடலாம்?' என்று கேட்டு மிரட்டியிருக்கிறார்களாம்.

3 அவர் மாதிரி
ஏன் பேசறே?

ஒரு படப்பிடிப்பின்போது மாடிப்படியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த ஒரு வில்லன் நடிகரைப் பார்த்துக் கனைத்தவாறே அடித்தொண்டையில் "வாடா வா..எங்கே வந்தே?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் ஒரு நடிகரின் பெயரைச் சொல்லி, "டேய் தேங்காய்! இப்படியெல்லாம் பேசாதே. இரண்டொரு படங்களில்கூட இப்படி அடித்தொண்டையில் பேசி நடித்திருக்கிறாய். அப்புறம் அவருக்குக் கோபம் வந்துவிடும்." என்றார்.

பேட்டி: ரத்னம்

==========================================

**லாக்டவுன் சமயங்களில் பல விஷயம் கண்ணில் பட்டிருக்கிறது அதில் இரண்டு விஷயங்கள்... முதலில் என்னைத் தாண்டிச் சென்ற இந்த வண்டி. ஆட்டோக்கள், கார்கள் ஓடக்கூடாது என்று அரசு உத்திரவு போட்டிருந்தது. போலீஸ்காரர் இந்த வண்டியை நிறுத்த முடியுமா? அவர் பாட்டுக்கு தாண்டிச் சென்று விட்டார்! இது மே மாதம் 28 ஆம் தேதி எடுக்கப்பட்ட படம்!**



இரண்டாவது விஷயம் : இந்தப் பெரியவர் (என்றுதான் சொல்லவேண்டும்), இவரை லாக்கவுட் தொடங்கிய நாளிலிருந்து இந்த பேருந்து நிறுத்தத்தில் பார்க்கிறேன். பார்க்க அவர் யாசகர் மாதிரி தெரியவில்லை

- மூட்டை முடிச்சுகளுடன் அப்படித் தெரிந்தாலும். அவரே சுய சவரம் செய்து கொள்வார். உடை மாற்றிக் கொள்வார். எங்கு சாப்பிடுவாரோ... காவல்காரர்கள் ஆதரவு இருந்திருக்குமா, தெரியவில்லை. அவ்வப்போது கால் மேல் கால்போட்டு அமர்ந்து ஏதோ ஒரு நோட்டில் அலலது டைரியில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பார். அந்த இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பார். இரவுகளில் மழை பெய்தபோது எனக்கு இவர் நினைவு வரும். இப்போதும் பாருங்கள் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறார்.







===============

**ஒரு மாத காலமாக உறிஞ்சு உறிஞ்சு என்று கொண்டிருக்கிறோம்! ஒரு நாளைக்கு மூன்று வேளை! பரவாயில்லை... உபயோகமாகவே இருக்கிறது. நாங்களும் முன்பு அகலமான பாத்திரத்தில் நீர் கொதிக்கவைத்து போர்வையால் போர்த்திக்கொண்டு கவிழ்ந்து கொண்டுதான் இருந்தோம். இது எங்களுக்கு புதுசு. ஆனால் வசதி. அப்போல்லோவில் ஆர்டர் கொடுத்து (முன்னூறு ரூபாய் ) டோர் டெலிவரி வாங்கிக்கொண்டோம் - ஒன்றுக்கு இரண்டாய்! ரிசர்வில் ஒன்று! ஆக, சகல விதத்திலும் 'அதற்கு' கறுப்புக்கொடி காட்டிக் கொண்டிருக்கிறோம்.**

**இதை இப்போது பகிரும்போதுதான் நானே பார்க்கிறேன். R O தண்ணீர் கூடாதாம்... உப்பு படியக்கூடாதே என்று அதை அல்லவா உபயோகித்துக் கொண்டிருக்கிறேன்? மாற்றிக்கொள்ள வேண்டும்! ஆனால் கேஜி ஆர் ஓ தண்ணீர் உபயோகிப்பதால் தவறில்லை என்றார். மின்கடத்தல் அதில் தாமதமாகும் என்பதால் சொல்லி இருப்பார்கள் என்றார்.**





===================================

**ஜூன் இறுதிக்குள் புதிய பிளாக்கர் வடிவம் வந்து சொல்லப்பட்டிருந்தது. தானாய் மாறட்டும் என்று நானும் விட்டிருந்தேன். இன்னும் மாறவில்லை!**



[மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...]

# வாசகர் விளம்பரம் பானுமதி வெங்கடேஸ்வரன்


**மின் நிலா ஆசிரியர்களுக்கு,**
**வணக்கம். இதுவரை புஸ்தகா மூலம் நான் வெளியிட்டுள்ள என்னுடைய மின் நூல்களைப் பற்றி விளம்பரப்படுத்த விரும்புகிறேன்.**

**நூல்களின் விவரம்:**


**மாங்காய் நெக்லெஸ்: என்னுடைய தளமான தம்பட்டத்திலும், எங்கள் பிளாகிலும் வெளியான என் சிறு கதைகளின் தொகுப்பு.**





**கோடையும் எடையும்: என்னுடைய தளமான தம்பட்டத்தில் எழுதிய நகைச்சுவை கட்டுரைகள்.**




**திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன் : அஹோபில யாத்திரை அனுபவம்**




**பரவசம் தந்த நவ திருப்பதியும், நவ கைலாசமும்.: திருநெல்வேலி சீமையை சுற்றி இருக்கும் நவ திருப்பதி மற்றும் நவ கைலாச கோவில்களுக்கு சென்ற பயண கட்டுரைகள்.**




**மேற்படி புத்தகங்களை pustaka.co.in என்னும் வெப் சைட்டில் வாங்கி படிக்கலாம். கிண்டிலிலும் படிக்கலாம். கிண்டிலில் Bhanumathy Venkateswaran என்ற பெயரில் தேட, கிடைக்கும்.**

**நன்றி.**

**அன்புடன்**
**பானுமதி வெங்கடேஸ்வரன்**

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# நினைவலைகள் : kayjee

கடலூரில் நான் படித்துக் கொண்டிருந்தபோது 3 சினிமா அரங்குகள் இருந்தன. கடிலம் பாலத்துக்கு அந்தப் பக்கம் நியூ சினிமா, இந்தப்பக்கம் ஹனுமான் கோவிலுக்கு எதிரில் முத்தையா தியேட்டர், ரயில்வே லயனுக்கு இந்த பக்கம் பாடலி.

நாள் தோறும் ஒரு மாட்டு வண்டியில் டமாரம், தம்பட்டம் போன்ற ஓசைக் கருவிகளுடன் வீதி வீதியாக சென்று விளம்பரம் செய்வார்கள். சந்திரஹாரம் என்ற படத்துக்கு பெரிய A4 விட சற்றுப் பெரிய சைசில் நோட்டீஸ் கொடுத்தார்கள். அன்று எனக்கு ஒரே நேரத்தில் 5 நோட்டீஸ் கிடைத்த ஆனந்தத்தில் தலைகால் புரியவில்லை.

ஒரு நோட்டீஸில் ஆங்கிலம் ஒன்றில் தமிழ் இப்படி அந்த வார பேப்பர் டாஸ்க் சந்திரஹாரம் புண்ணியத்தில் நிறைவுற்றது. திங்களன்று என் கவனத்தில் படாத அந்த விஷயம் பூவராகமுரத்தி சார் கண்ணில் பட்டதும், அவர் வகுப்பின் வெளியே போகக் கட்டளையிட்டார்.

நான் வகுப்பின் வெளியே நின்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்த போது Rev father மரியதாஸ் கால் பரிக்ஷை பேப்பர்களுடன் வந்தவுடன் கேட்ட முதல் கேள்வி "ஏன் வெளியில் நிற்கிறாய் " என்பது தான்.

நான் பதில் சொல்லும் முன் ஆசிரியர் முந்திக்கொண்டார்.
இவன் எழுதிய பேப்பர் டாஸ்க் பாருங்க father என்று என் கை வண்ணத்தை தலைமை ஆசிரியரிடம் காட்ட, அவர் வாங்கிப் பார்த்து, ‘கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம் போல இருக்கு’ என்கிறார். மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# மடியில் நான் துயில இடை துவள கலை பயில : சி பா ர - ஸ்ரீராம்

சினிபாரத் தயாரிப்பில் 1977 இல் வெளிவந்த திரைபபடம் பெண் ஜென்மம். ஏ ஸி திருலோக்சந்தர் இயக்கத்தில் வாலி பாடல்களை எழுத, இளையராஜா இசை அமைத்த திரைப்படம். முத்துராமன் - ஜெயபாரதி நடித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.



மற்றபடி அதிக விவரங்கள் தெரியவில்லை. இந்தப் பாடல் எனக்கு அப்போதிலிருந்தே மிகவும் பிடிக்கும்.



**கே ஜே யேசுதாஸ் மற்றும் பி சுசீலா குரலில் மாண்ட் ராகத்தில் அமைந்த பாடல். யேசுதாஸ் பாட ஆரம்பிக்கும் இடம் முதல் அவர் குரலில் வரும் சரணங்கள் எல்லாம் இனிமை. மிக இனிமையான டூயட். இளையராஜா கொஞ்சம் MSV பாணியில் இசை அமைத்திருக்கிறாரோ என்று தோன்றும்.**



**வாலியின் வரிகள் இனிமை.**

**செல்லப் பிள்ளை சரவணன் - திருச்**
**செந்தூர் வாழும் சுந்தரன்**
**கோபத்தில் மனஸ்தாபத்தில்**
**குன்றம் ஏறி வந்தவன்**

**செல்லப் பிள்ளை சரவணன் - திருச்**
**செந்தூர் வாழும் சுந்தரன் .**

**ஊஞ்சலில் கொஞ்சம் ஆடுவான் - பின்பு**
**ஊடலில் கொஞ்சம் ஆடுவான்**
**கூந்தலில் மலர் சூடியே - அவன்**
**கூட நான் வர வேண்டுவான்**
**மயங்கி நான்**
**மயங்கி நான் மெல்ல**
**தடை சொல்ல சினம் கொள்வான் .**

**செல்லப் பிள்ளை சரவணன் - திருச்**
**செந்தூர் வாழும் சுந்தரன்**
**வள்ளியை இன்பவல்லியை**
**அள்ளிக்கொண்ட மன்னவன்**
**செல்லபிள்ளை சரவணன் - திருச்**
**செந்தூர் வாழும் சுந்தரன் .**

**மாலையில் ஒரு மல்லிகை - என**
**மலர்ந்தவள் இந்த கன்னிகை**
**மன்மதன் கணை ஐவகை - அதில்**
**ஓர் வகை இவள் புன்னகை**
**மடியில் நான்**
**மடியில் நான் துயில இடை துவள**
**கலை பயில .**

**செல்லப் பிள்ளை சரவணன் - திருச் செந்தூர் வாழும் சுந்தரன் .**

**கார்குழல் உந்தன் பஞ்சணை - இரு**
**கைகளே உந்தன் தலையணை**
**வேலவன் கொஞ்சும் புள்ளிமான் - அதன்**
**வடிவம்தான் இந்த வள்ளிமான்**
**அருகில் நான்**
**அருகில் நான் வந்தேன்**
**இதழ் செந்தேன் இதோ தந்தேன் .**

**செல்லப் பிள்ளை சரவணன் - திருச் செந்தூர் வாழும் சுந்தரன்.**

**>>>>>> பாடல் சுட்டி <<<<<<<<<<<**

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

**அருணும் அங்கிதாவும் அன்று ஆறு மணிக்குத்தான் வந்தார்கள். ஆடி வெள்ளிக்கிழமை. வித்யா அங்கிதாவிடம் " பக்திப்பாடல் ஏதாவது தெரியும் என்றால் பாடு. ஆடி வெள்ளிக்கிழமையன்று மாலை நேரமாக இருக்கு " என்றாள்.**

**அங்கிதா கண்களை மூடி சில வினாடிகள் யோசனை செய்து, பிறகு பாடினாள்.**

**வரம் தந்தருளும் வரமஹா லக்ஷ்மியே**
**தினம் வந்தருள் அம்மா நீயே**
**வானின்று மழை பெய்திடவே**
**வையகம் யாவும் செழித்திடவே (வரம் தந்தருளும்)**

**இன்பம் உலகில் நிலைத்திடவே**
**என்றும் சந்தான சௌபாக்கியமும்**
**குன்றா நவநிதியும் அரசபோகமும்**
**வீரமும் வெற்றியும் அருள்வாயே (வரம் தந்தருளும்)**

**வித்யா : " ஆஹா ! பேஷ், பேஷ் ! சூப்பர் பிலஹரி ராகப்பாடல்! ரொம்ப நன்றாகப் பாடினாய். இது யார் இயற்றிய பாடல்? "**

**அங்கிதா : " சரியாகத் தெரியவில்லை" (மின்நிலா வாசகர்கள் தெரிந்தால் சொல்லுங்க)**

**அருண் : " வித்யா ஆண்ட்டீ ! வெள்ளிக்கிழமை என்பதால் அங்கிதா, மகாலட்சுமி பாடல் பாடினாள். இதுவே**

**சனிக்கிழமையாக இருந்திருந்தால் அவள் என்ன பாடியிருப்பாள்? "**

**அங்கிதா : " சனி - உன்னைப் பாடச்சொல்லியிருப்பாங்க! "**

**அ ஜீ : " அங்கிதா - உங்க வீட்ல உனக்கு ஏன் அங்கிதா என்று பெயர் வைத்தார்கள்?"**

**அங்கிதா : " நான் பிறந்தப்போ என் தாத்தா எனக்கு 'அங்கயற்கண்ணி' என்று பெயர் வைக்கச் சொன்னாராம். என் அப்பாவோ எனக்கு அனிதா என்று பெயர் வைக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாராம். அம்மாவும் மாமாவும் இரண்டு பெயர்களையும் சேர்த்து அங்கிதா என்று வைக்கலாம் என்று சொல்லி, அந்தப் பெயரையே எனக்கு வைத்தார்களாம்! "**

**வித்யா : " சரி போகட்டும் - இன்னும் மூன்று பாயிண்ட் பாக்கி இருக்கே. அதை சொல்லிடுங்க."**

**அ ஜீ: " பாயிண்ட் 16 ஒருவர் அடிக்கடி Mobile phone யை பார்த்துக் கொண்டிருப்பது or Mobile சத்தம் (Notification tones) கேட்டால் உடனடியாக அதை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் அவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்படிருக்கின்றார் என்று அர்த்தம்"**

**வித்யா : சிரித்துக்கொண்டே " இதையே நீங்க மொபைலைப் பார்த்துத்தானே படிக்கிறீங்க! நீங்க உளவியல் ரீதியா ஏதாவது ...... "**

**அ ஜீ : " இது நல்லா இருக்கே - பாயிண்ட் சொல்லுடா என்று என்னைக் கேட்க வேண்டியது; அப்புறம் பைத்தியம் என்று எனக்கு நீயே பட்டம் கொடுப்பதா!"**

**அருண் : " அங்கிள் - நீங்க எப்படி எல்லா தகவல்களையும் விரல் நுனியிலேயே எப்பவும் வெச்சிருக்கீங்க? ஐ மீன் மொபைலில் எப்படி சேர்த்துவைத்துக் கொள்கிறீர்கள்? "**

**அ ஜீ : " இப்போதெல்லாம் பெரும்பாலானவர்களுக்கு A to Z ஆண்டிராய்ட் ஃபோன்தான் என்று ஆகிவிட்டது. ஆயகலைகள் அறுபத்துநான்கு போல இந்த அறுபத்துநான்கு ஜி பி ஃபோன் கைவசம் இருந்தால், அகில உலகமுமே நம்ம கையிலே வந்துவிட்டதைப்போல அப்படி ஒரு திருப்தி. இதில் clevnote என்று ஒரு app போட்டு வைத்திருக்கிறேன். அதில் சேமிக்க வேண்டியவைகள் எல்லாவற்றையுமே அததற்குரிய தலைப்பில் சேர்த்துவைத்துவிடுவேன். எந்த நேரத்தில் எது வேண்டும் என்றாலும் அதிலிருந்து எடுத்துப் பார்த்து, படித்துக்கொள்ளலாம் ! ஆனால் நான் மொபைல் சத்தம் கேட்டால் உடனடியாக எடுத்துப் பார்ப்பது எல்லாம் இல்லை. "**

**அங்கிதா : " எனக்கு பதினெட்டு வயது வரை, மொபைல் ஃபோன் கிடையாது என்று சொல்லிவிட்டார் என் அப்பா. "**

**அருண் : " எனக்கு ஒரு ஃபோன் இருக்கு. ஆனால், அதை நான் வீட்டில் இருக்கும்பொழுதும், லீவு நாட்களிலும் மட்டும்தான் யூஸ் செய்யவேண்டும் என்று அப்பா சொல்லியிருக்கிறார். படிப்பு முடித்து என் சொந்தக்காலில் நிற்க ஆரம்பிக்கும்வரை போன்ல நெட் சர்ஃபிங், ப்ரைசிங் - எதுவும் கூடாது என்று சொல்லிவிட்டார் அப்பா. நானும்**

அப்பா சொல்வது என் நல்லதுக்குத்தானே என்று அவர் பேச்சை தட்டாமல் இருந்துவருகிறேன். "

வித்யா : " காலேஜிலிருந்து ஏதாவது அவசரமா வீட்டுக்குச் சொல்லவேண்டும் என்றால் என்ன செய்வாய்? "

அருண் : " என் கிட்டதான் மொபைல் இல்லையே தவிர என் நண்பர்கள் பலபேரிடம் உண்டு. அவர்களின் ஃபோனிலிருந்து கால் செய்து தகவல் சொல்லிவிடுவேன். அல்லது எஸ் எம் எஸ் அனுப்பிவிடுவேன்."

வித்யா : " சரி - நீங்க அடுத்த பாயிண்ட் சொல்லுங்க."

அ ஜீ :" பாயிண்ட் நம்பர் 17. ஒரு மனிதன் ஆகக்குறைந்தது 6 மணித்தியாளங்கள் (மணிநேரம்) ஆழ்நிலையில் உறங்க வேண்டும் (எந்த ஒரு ஓசைக்கும் எழும்பாத ஆழ்நிலை தூக்கம்) இவ்வாறு தூங்குபவரானால் இவருடைய பல்வேறுப்பட்ட உடல், உளவியல் சார்ந்த நோய்கள் வராது."

வித்யா : " நம்ம யாருக்குமே இந்த தூக்கம் வராத பிரச்னை இல்லை என்றுதான் நினைக்கிறேன். "

அங்கிதா : " அருண் போல ஒரு நாளில் ஆறு மணி நேரம் மட்டும் முழிச்சுகிட்டு இருப்பவர்களுக்கு ஏதேனும் ஸ்பெஷல் பாயிண்ட் இருக்குதா அங்கிள்? "

அருண் : " அப்படி பதினெட்டு மணிநேரம் தூங்குபவர்கள் மட்டும்தான் அதிபுத்திசாலிகளாக, கண்கள் ஒளிவீச, தேஜஸ் கொண்ட முகம் கொண்டவர்களாக இருப்பார்களாம். இதை நான் சொல்லவில்லை - அயர்லாந்து அறிஞர் ராபர்ட் கனவ்

காணே என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே சொல்லியிருக்கிறார்."

வித்யா : " என்ன பெயர் அது! கனவ் காணேயா! "

அங்கிதா : " ஹா ஹா ஆண்ட்டீ ! இந்த அருண் விடற டுப்பை எல்லாம் நம்பறீங்களே!"

அ ஜீ : " ஹ ஹ ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில், Sir Robert Kane என்று ஒருவர் அயர்லாந்த் - டப்ளினில் வாழ்ந்தது உண்மைதான். ஆனால் அவர் ஒரு chemist and educator. அமிலங்கள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மருத்துவ வேதியியல் துறையில் பல பங்களிப்புகள் செய்தவர். தூக்கம் பற்றி எல்லாம் அவர் ஒன்றும் சொன்னது இல்லை என்று நினைக்கிறேன். "

வித்யா : " உங்களுக்கு எப்படி தெரியும்? "

அ ஜீ : " அருண் அயர்லாந்து அறிஞர் ராபர்ட் கானே என்று சொன்னவுடனேயே, மொபைலில் கூகிள் விண்டோ க்கு போய், " Ireland Robert Kane " என்று தட்டினேன். தகவல் உடனே கிடைத்தது! "

அருண் : " ஏ ஜி அங்கிள் - கூகிளில் நீங்க தப்பான இன்புட் கொடுத்திருக்கீங்க. நான் சொன்னது மாதிரி நீங்க Robert Kanav Kane about sleep hours " என்று கொடுத்திருக்கணும். "

அ ஜீ : " அப்படி கொடுத்துப் பார்த்தேன். எந்த நாட்டிலும் kanav என்ற மிடில் நேம் இல்லை!"

**அருண் : " உங்க மொபைல் போன்ல லேட்டஸ்ட் தகவல்கள் எல்லாம் வராது என்று நினைக்கிறேன்!"**

**அ ஜீ : " அப்படி நினைக்காதே - இதோ பார் இப்போ கூகிள் விண்டோல நான், ' அருண் அங்கிதா அண்ட் அறிவுஜீவி ' என்று கொடுக்கிறேன். என்ன வருகிறது என்று நீயே பார் !"**

engalblog.blogspot.com › 2020/07 ▾ Translate this page

சிந்தனையாளர்களும் ... - எங்கள் Blog

3 days ago - ... திரும்ப பொருளடக்கம் பகுதிக்கு செல்லலாம். மீண்டும் நினைவுறுத்துகிறோம் -. அ ) அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி பகுதி.

www.docdroid.net › file › mn-006-pdf ▾ PDF Translate this page

Untitled - DocDroid

கேள்வி, பதில்கள். வாசகர்கள் அனுப்பிய தகவல்கள். 20 & 21. அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி. ஒரு கிடார் தேய்ந்து புல்லாங்குழல் ஆகிறது.

**வித்யா : " அட ஆச்சரியமா இருக்கே! கூகிள்ல மின்நிலா தகவல் கூட வருதே! அப்போ நாம்ப எல்லோரும் world famous ஆயிட்டோமா!"**

**அருண் : " அடுத்த கடைசி பாயிண்ட் சொல்லுங்க அங்கிள் "**

**அ ஜீ: "பாயிண்ட்18 - ஒருவர் அதிகமாக Negative Thoughts (முடியாது/கிடைக்காது/இயலாது) பேசுபவராக இருந்தால் அவர் வாழ்க்கையில் பல்வேறுப்பட்ட ஆசைகள் நிறைவேறாமல் வாழ்ந்து இருப்பார். இவர்களே அதிகம் Negative Thoughts பேசுபவராக இருப்பார்"**

வித்யா : " என்னைப் பற்றி யாராலும் அப்படி எல்லாம் ஒன்றும் சொல்லமுடியாது. அதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்காது. அதனால்தான் சொல்கிறேன், யாராலும் என்னைப் பற்றி சொல்ல இயலாது"

அ ஜீ : " இது போதும் வித்யா. இன்னும் ரெண்டே நாட்களில் கூகிளில் இது பதிவாகி, உலகம் முழுவதும் உன்னைப் பற்றி தெரிந்துகொண்டுவிடும்!"

எல்லோரும் வாய் விட்டு சிரிக்க அன்றைய கூட்டம் இனிதே கலைந்து சென்றது.
(தொடரும்)




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# சுவாரஸ்ய மனிதர்கள் By kgg

எங்கள் குடும்ப வாட்ஸ் அப் குழுவில் சென்ற வாரம் நடைபெற்ற சுவாரஸ்ய பரிமாற்றங்களின் தொகுப்பு இங்கே



**இந்தப் படத்தை குழுவில் வெளியிட்டவர், இந்தப் படம் குறித்த கவிதைகள் கேட்டிருந்தார்.**

**அவ்வளவுதான் - பாப் கார்ன் பொரிவது போல அடுத்த அரைமணி நேரம் வந்து விழுந்தன பல இட்லிக் கவிதைகள்!**

**இட்லிக் கவிராயர்கள் சங்கம்!**

**1)**

**மல்லிகை பூ போல இட்லி அதே போல**
**மனசுக்காரர் சாப்பிடுவது பார்த்து என்**
**மனம் காலை பூக்கள் போல் மலர்ந்தது .**

2)
இட்லி வெள்ளை
மல்லிப் பூ வெள்ளை
சாப்பிடுவர் தலையும்
போட்டோக்ராப்ர் மனமும் வெள்ளை
பார்ப்பவர்கள் குணமும் வெள்ளை
இருக்கு அனைவருக்கும் அன்பு கொள்ளை..

3)
மல்லிகை பூ போன்ற இட்லியாரே வாங்க
வகுத்து குள்ளே போங்க!

4)
எல்லாமே வெள்ளை..
இங்கு இல்லை,
எதுவும் சொள்ளை!!

5)
பட்டன தட்டிவிட்டா,
தட்டுல இட்டலியும்,
சட்டனியும் சாம்பாரில் குளித்து
சர்க்கரையில்  நனைந்து
பட்டுன்னு வந்திடணும்!

6)
செஞ்சி குடுத்தவர் மனம் வெண்மை மற்றும் மென்மை!

7)

(நீலக்கடலின் ஓரத்தில் மெட்டில் பாடவும்)

தட்டுல இட்டிலி வெச்சிருக்கு
நடுவுல சட்டினி போட்டிருக்கு
அழகா பிச்சி திண்ணுடுங்க
மெதுவா மென்னு சாப்பிடுங்க

8)

அதி'காரம்' : "இட்டளித்தார் பெருமை"

இட்டலி என்றவோர் உணா அதனை
ஒட்டி நுகர்வது சாம்பார்.

இட்டலியாலாய பயனென்கொல் அதற்கொப்ப
சட்டினி அமையாப்பெறின்.

பஞ்சோ பனித்திரளோ சூடோ சுவையோ
அஞ்சாறு போதுமோ புகல்.

சூடும் சுவையும் மென்மையும் வெண்மையும்
நாடும் இட்டிலிக் கழகு.

சாரமாய் இருக்குமோ சட்டினியும் சாம்பாரும்
காரமாய் தாமிள காய்ப்பொடி.

==============

சுவாரஸ்ய பக்கங்களை ரசித்தீர்களா?

நன்றி.

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பாசிடிவ் செய்திகள்

**மலைச்சாரலில் ஒரு ஐ டி கம்பெனி.**

**1) "....... அருகில் உள்ள தென்காசியில் நல்ல மருத்துவமனை, பொழுதுபோக்க திரையரங்குகள், சுற்றிலும் நிறைய அருவிகள், காலாற நடந்து செல்ல ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.அதுபோக, தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு தேவையான, 24 மணி நேர மின்சாரம், அதிவேக இணையதள தொடர்பு, அருமையான ஊழியர்களும் இருப்பதால், என் வெற்றிப் பயணம் தொடர்கிறது......"**

**சென்னை போன்ற பெருநகரங்களில் தான், தகவல், தொழில்நுட்ப நிறுவனங்கள் இயங்க வேண்டும் என்ற நியதியை உடைத்து, தென்காசி மாவட்டம், மத்தளம்பாறையில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக, வெற்றிகரமாக, கம்ப்யூட்டர் சாப்ட்வேர் நிறுவனத்தை நடத்தி வரும்,** 'ஸோஹோ' ஸ்ரீதர் வேம்பு.



2) தப்லீக் ஜமாத் அமைப்பினர் மற்றும் அவரது குடும்பத்தினர் என கொரோனாவிலிருந்து மீண்ட 5 ஆயிரம் பேர் பிளாஸ்மா தானம் செய்ய முன்வந்துள்ளனர். இது தொடர்பாக, மற்றவர்களுக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும் என மத தலைவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.



3) மதுரை, அய்யர் பங்களாவைச் சேர்ந்தவர் சுந்தரேஸ்வரன், 35; மெக்கானிக்கல் பொறியாளர். மருத்துவ உபகரணம் தயாரிக்கும் நிறுவனத்தின் பங்குதாரராக உள்ளார். ஏப்ரலில், சானிடைசர், அலைபேசி, முக கவசத்தை நீரில்லாமல் சுத்தப்படுத்தும், 'ரெட் பாக்ஸ்' கருவியை கண்டுபிடித்தார். தற்போது, காற்றில் கிருமிகளை அழிக்கும் கருவியையும், அலைபேசி மூலம் இயக்கி, கொரோனா வார்டில் கிருமி நாசினி தெளிக்கும் கருவியையும் கண்டுபிடித்துள்ளார்.



4) ரஷ்யா தேதி சொல்லி விட்டது... **அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வருகிறதாம் தடுப்பூசி....**



5) கடந்த நான்கு வருடங்களாக பாடம் நடத்திவருகிறார் சத்யேந்திரபால். காலையில் மூன்று மணி நேரமும் மாலையில் மூன்று மணி நேரமும் வகுப்பு நடக்கும் இது ஒரு ட்யூசன் வகுப்பு போலத்தான் வகுப்பு வாரியாக பிரித்து பாடம் நடத்துவார் படிப்பில் ஆர்வம் ஏற்பட்ட குழந்தைகள் பலர் இப்போது பள்ளிக்கூடம் சென்று வருகின்றனர் பள்ளியில் புரியாத பாடங்களை இவர் மூலமாக தெரிந்து கொள்வர்.



[மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...]

# காற்றையும் பதம் பார்க்கும் கோவிட்-19: ரமா ஸ்ரீநிவாசன்




எங்கள்பிளாக் உறுப்பினர்களே மற்றும் வாசகர்களே, என்னை அடிக்க வந்து விடாதீர்கள். என்னடா இவள்? எப்பொழுது பார்த்தாலும் கோவிட்-19 தாக்கத்தைப் பற்றியே எழுதுகிறாளே என்று எண்ணாதீர்கள்.

எனக்கு படித்தும் பார்த்தும் தெரியும் அனைத்து தகவல்களையும் இத்தளத்திலிட்டால் நீங்களும் உங்கள் சுற்றாரும் பயனுறுவீர்கள் என்பது மட்டுமே என் நோக்கமாகும்.

ஜூலை 6, 2020 அன்று 32 நாடுகளிலிருந்து 239 விஞ்ஞானிகள் வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஷேஷனுக்கு ஓர் திறந்த கடிதத்தை (open letter) கையொப்பமிட்டு அனுப்பினர். அக்கடிதத்தின் சாராம்சம் என்னவென்றால் கொடிய நோய் கோவிட் 19 காற்று வழியும் பயணித்து மக்களை பாதிக்கும் என்ற திகிலான செய்திதான்.

ஆராய்ச்சியின் வலிமையால் அவர்கள் கண்டு பிடித்தது என்னவென்றால் இந்த கோவிட் 19 மூச்சை வெளி விடும்போதும், பேசும்போதும், இருமும்போதும் கண்ணுக்கு தெரியாத சிறு துளிகளாக காற்றில் பரவி, மிதந்து, பாதிக்கப் பட்டவரிடமிருந்து 1 அல்லது 2 மீட்டர்கள் (இது

மருத்துவர்களால் முன் வைக்கப் பட்ட 3 அல்லது 6 அடி விலகி இருப்பதைத் தாண்டி) தொலைவில் உள்ள மற்றவரை பாதிக்கும் வீர்யம் உடையது என்பதுதான். குலை நடுங்குகிறது அல்லவா?




வாருங்கள் மேலும் பார்ப்போம். என்னதான் கூறுகிறார்கள் என்று.

1. சரி. இப்போது ஏரோசோல்கள் அல்லது தூசு படலங்கள் என்றால் என்ன என்றும் இவை சுவாசத் துளிகளிலிருந்து எப்படி வேறு படுகின்றன என்பதையும் முதலில் தெரிந்துக் கொள்வோம்.

சராசரி புரிதலின்படி வேகத்தில் ஓர் சிவிரி கெண்டியிலிருந்து (aerosol can) வெளியேற்ற படும் நீர் துளிகள்தான் தூசுப் படலங்களாக மாறும் என்று நாம் அறிவோம். ஆயின் வைரஸ்

ஏரோசோல் என்பது விஞ்ஞானிகளின் வலியுறுத்தல் படி சுவாசத் துளிகளை விட 5 மைக்ரான்களோ அல்லது குறைவாகவோ இருக்கும் என்றும் சுவாசத் துளிகளை விட நீண்ட நேரம் காற்றில் மிதக்கும் என்பதும்தான். சுவாசத் துளிகள் வெளி வருவது தும்மலாலோ இருமலாலோதான். ஆனால் ஏரோசோல்கள் மக்கள் மூச்சு விடும்போதும், உரக்க சிரிக்கும்போதும் சத்தமாகப் பாடும்போதும் கூட வெளியேற்றப் படலாம் என்று ஆராய்ச்சியின் மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இவை காற்றிலேயே நீண்ட நேரம் மிதக்கும் தன்மையுள்ளதால், கோவிட் நோயாளியின் மூச்சுக் காற்றானது அதிகக் காற்றோட்டமில்லாத சிறிய அறையில் 1 அல்லது 2 மீட்டர் தொலைவில்லுள்ள மற்றவரை வெகு விரைவில் தாக்கும் வாய்ப்புள்ளது.

இந்த ஆபத்துதான் விலகியிருப்பதற்கும், மாஸ்க் அணிவதற்கும், கையுறைகள் அணிவதற்கும், அடிக்கடி கைகளை கழுவுவதற்கும் அடிப்படைக் காரணமாக இக்கோவிட்டின் துவக்கத்திலிருந்து இருந்து வருகின்றது.

2. ஏரோசோல்கள் வழியாகவும் கோவிட் 19 கிருமிகள் பரவுகின்றன என்னும் அறிவிப்பிற்கு பின்னால் விஞ்ஞான ரீதியான ஆதாரம் உள்ளதா ?

இக்கேள்விக்கு வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஷெஷனின் அறிக்கைப் படி அதிகார பூர்வமான போதுமான ஆதாரங்கள் இல்லையென்றாலும், மருத்துவமனைகளிலும் ஆய்வகங்களிலும் இந்த ஏரோசோல்கள் வழி கிருமி பரவுதல் அவசியமான உண்மை என்று கூறியுள்ளது. அதிகார பூர்வமான ஆதாரங்களின் அளவுகோல் மிக உயர்த்தி

வைக்கப் பட்டிருப்பதின் காரணம் இது உண்மை என்பது அறிவிக்கப் படுவதற்கு முன் மக்களை சென்றடைந்தால் கட்டுக்கடங்கா பீதி ஏற்படலாம் என்பதேயாகும். அரை குறையாகக் கேள்வி பட்டு மருத்துவத் தொழிலாளிகள் பயத்தில் வேலைக்கு வருவதே நின்று விடலாம். அல்லது பயத்தின் விளைவாக அனைத்து N-95 மாஸ்க்குகளையும் அவர்களே வாங்கி பதுக்கும் சூழல் கூட உருவாகலாம்.

**3. மேல் கூற பட்ட திறந்த நிலைக் கடிதம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக கூறுகிறதா?**

இன்னும் இவ்விஷயத்திற்கு உலக அளவிலான ஏற்றுக் கொள்ளுதல் இல்லாவிட்டாலும், மேற்கூறிய 239 விஞ்ஞானிகளின் ஒட்டு மொத்த கருத்தில் பக்க பலமான சாத்தியக்கூறுகள் பல இருப்பதால் கோவிட்-19 தாக்கத்திற்கு ஓர் எதிர் மருந்து அல்லது வேக்ஸின் கண்டு பிடிக்கப் படும் வரை அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட வேண்டும் என்பதற்கு ஓர் மாற்று கருத்து கூடாது என்பதேயாகும்.

மேலும், முன்னதாக ஸார்ஸ் கோவிட்1 தாக்கத்தின் போது மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சி மற்றும் இப்போது கோவிட்-19 பேண்டமிக் ஆராய்ச்சி இரண்டின் மூலமும் இக்கிருமிகள் காற்று வழி பரவவும் வாய்ப்புள்ளது என்பது தெரிய வருகிறது. முக்கியமாக அவ்விஞ்ஞானிகள் ஒரு சீன உணவருந்தகத்தின் நேர்காணலை பல முறைகள் ஆராய்ந்து பார்த்த போதும் அங்கு யாரும் யாரையும் நேராகவோ அல்லது புத்தகம், நீர் பாட்டில்கள் வழியோ தொடவுமில்லை என்பதும் உறுதியானது. ஆனால் நோய் பரவியிருக்கின்றது என்பது மட்டும் ஊர்ஜிதமானது.

**அதே போல் முன்னதான RSV கிருமிகள், ஃப்ளூ போன்ற தாக்கங்கள் பற்றி ஆராய்ந்த போதும் அவ்வித நோயாளிகள் உள்ள சிறு அறைகளில் காற்று வழி தொற்று இருந்ததாகவும் இதே விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள். அதே அளவுகோலைக் கொண்டு பார்க்கும்போது கோவிட்-10 கிருமிகளும் அவ்வாறே பரவும் என்ற சாத்தியக் கூறு மேலோங்கி நிற்பதால், எல்லா முன்னெச்செரிக்கைகளும் எடுக்கப் பட வேண்டும் என்பது அவசியம் என்றும் அழுத்தமாக அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.**

**இந்த காற்று வழி பரவுதல் பற்றிய சர்ச்சை சிறிது ஊதிப் பெரிதாக்கப் பட்டாலும், அளவு குறைந்த அறைகளில் நோயாளிகளுடன் வாழும் மற்றவரும் காற்று வழியாக தாக்கப் படுவார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகும் என்று ஓய்வு பெற்ற வேலூர் கிறிஸ்டியன் மெடிகல் காலேஜ் பேராசிரியர் திரு.டீ.ஜேகப் ஜான் கூறுகிறார். அப்படியான சூழலில், எப்போதும் மாஸ்க் அணிந்து வாழப் பழகிக் கொள்வது உயிரைக் காப்பாற்றும் என்றும் கூறினார்.**

**4. சரி, வருங்காலத்தின் பாதைதான் என்ன?**

**மேலும் அழுத்தமான அதிகாரப் பூர்வமான ஆதாரங்களுக்கு காத்திருக்கும் நிலையில் வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஷேஷன் தன்னால் முடிந்த வரையில் எல்லா பாதைகள் வழியாகவும் இவ்வுயிர்க் கொல்லி நோயைத் தடுத்து மக்களை காக்க அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றது. நல்ல காற்றோட்டமான சூழலை மருத்துவமனைகளிலும், பள்ளிகளிலும் ஏற்படுத்துவது, பொது இடங்களில் அதிக கும்பல் சேராமல் கண்காணிப்பது, கட்டடங்களில் வீரியமிக்க வெளியேற்ற குழாய்கள், மிகச் சிறந்த காற்று சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி**

நாசினி அல்ட்ரா வயலெட் விளக்குகள் பொருத்துதல் போன்ற முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது என்று மத்திய மற்றும் மாநில அரசுகள் வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஷேஷனின் பரிந்துரையை சிரமேற்கொண்டு ஒருங்கிணைந்து செயல் படுகின்றன.

அரசாங்கம் எவ்வளவு நல்லது செய்ய முற்பட்டாலும், நண்பர்களே தனி மனிதரான நமக்கும் ஓர் பெரும் பொறுப்புண்டு. அது அரசாங்கத்துடன் கைகோர்த்து செயல் படுவது. அதை நாம் யாவரும் பிசிறில்லாமல் செய்கிறோமா என்பதுதான் கேள்வி.

மாலை 4 மணியானால் போதும். எங்கள் வீதியிலிருக்கும் அத்தனை ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் மாஸ்க், தற்காப்பு இடைவெளி (social distancing) எதுவுமே பாராட்டாமல் கூட்டம் கூட்டமாக நின்று பேசுவதும், போவதும் வருவதும் காண்பதற்கே மிகவும் வருத்தமாக ஒரு புறம் இருக்கின்றது. இன்னொரு புறம், அவர்கள் அருகே சென்று கோபம் தீர வசவு பாட வேண்டும் போலும் தோன்றுகின்றது. இவர்கள் மூளையில்லாமல் எப்படி வேண்டுமானாலும் வாழட்டும். ஆயின், அதே வீதியில் வாழும் மற்ற குடும்பங்களை பற்றி ஒரு சிறு கவலையும் இன்றி சிரித்து பேசிக் கொண்டும் வம்பளந்து கொண்டும் இருப்பதுதான் எரிச்சலூட்டுகின்றது. இவர்கள் தங்கள் செயலால் மற்றவர் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகும் நிலையை வரவழைத்து விடுவார்கள் போலிருக்கின்றது. வயது முதிர்ந்தவர் ஒருவர் கூட வெளியே வர முடியாத சூழல். போதாதற்கு வீதியிலேயே காரி உமிழ்வது வேறு.

**இந்த கோவிட்டின் கோரத் தாண்டவத்தின் நடுவிலும் மக்கள் திருந்தவில்லை என்றால் நம் பிள்ளைகளின் எதிர் காலத்தை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கின்றது.**

**“இதுவும் கடந்து போகும்; இதுவும் கடந்து போகும்” என்று எத்தனை நாட்கள் பொறுமையாக நாம் மட்டும் வாழ்வது?**

**அரசாணையை மதித்து மனிதர்கள் வாழ்க்கை முறைகளை மாற்றி கொள்ளும் வரை ஒன்றின் பின் ஒன்றாக தடைக் கற்கள் வந்தபடிதான் இருக்கும். அதற்கு மக்களின் மூடச் செயல்களேயன்றி வேறு எதுவும் பொறுப்பல்ல,**




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

## புத்தக விமரிசனம் : KG கௌதமன்

## கோடையும் எடையும் :: ஆசிரியர் திருமதி பானுமதி வெங்கடேஸ்வரன்.

பொருளடக்கம்


கதை அல்ல நிஜம்!

கோடையும் எடையும்

சினிமாவில் வராத கவுண்டமணி செந்தில் காட்சி!

சென்னையில் ஒரு மழைக் காலம்

டிசம்பர் சீசனில் ஒரு விமர்சனம்

டெஸ்ட் மாட்ச் VS ஐ.பி.எல். ஒரு ஒப்பீடு

தயிர் வடை மஹாத்மியம்

நினைச்சது ஒண்ணு, நடந்தது ஒண்ணு

பியூஷன் உலகம்

மஹாலய அமாவாசையும் மாடும்!

வீட்டை மாற்றிப் பார்

அமேசான் கிண்டிலில் ஒரே மூச்சில் நான் படித்து முடித்த சில புத்தகங்களில் இது ஒன்று. எனக்கு எந்தக் காலத்திலும் பிடித்த புத்தகங்கள் நகைச்சுவை கதைகள், கட்டுரைகள், நாடகங்கள். அந்த வரிசையில் நூலாசிரியர் தன்னுடைய விளம்பர பக்கத்தில் (பார்க்க : இந்த மின்நிலாவில், வாசகர் விளம்பரம் பக்கங்கள்) குறிப்பிட்டிருந்ததைப் படித்ததும், அந்தப் புத்தகத்தை கிண்டிலில் உடனடியாக பதிவிறக்கம் செய்து வைத்தேன்.

படிக்க ஆரம்பித்தவுடன், சுவாரஸ்யமாக அதில் மூழ்கிவிட்டேன். முதல் கட்டுரையில், தான் பார்த்த திரைப்படப் பாத்திரங்களுடன் தனது நட்புகள், உறவினர்களில் சந்தித்த காரெக்டர்களை ஒப்பிட்டு விவரித்துள்ளார். ஆனாலும் அந்த கல்லூரித் தோழியின் ரகசிய தாலி விவகாரம் அப்புறம் என்ன ஆயிற்று என்று சொல்லாமல் விட்டுவிட்டார்!

கோடையும் எடையும் ஆங்காங்கே புன்னகையை வரவழைத்தது. நாக்கு நாலு முழம் என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கிறார்!

அடுத்த இரண்டும் சினிமா காமெடி காட்சிகளின் தாக்கம் கொண்ட கட்டுரைகள்.

டிசம்பர் சீசனில் ... கட்டுரை சத்தான நகைச்சுவை. குப்புடு பப்புடு விமரிசகர்கள் சிரிக்கவைத்துவிட்டார்கள்.

சினிமா, ஹோட்டல், சபா காண்டீன் என்று உலா வந்தவர் கிரிக்கட்டை விட்டு வைக்காமல் ஐ பி எல் உடன் மணவாழ்க்கை பற்றிய கட்டுரையில் சில பவுண்டரி ஷாட் அடித்திருக்கிறார். தயிர்வடை மகாத்மியம், தோழியின் மகளுக்குச் சொன்ன எடைக்குறைப்பு யோசனையும் அதன் விளைவும், மற்றும் பியூஷன், அகத்திக்கீரை, வீடு மாற்றும்போது, கண்ணில் படும் ஒவ்வொரு பொருளோடும் மலர்கின்ற பழைய நினைவுகள் என்று எல்லாவற்றையும் (நகைச்)சுவையாக எழுதியிருக்கிறார், திருமதி பா வெ.

நீங்களும் படித்து ரசிக்கலாம்.



From kayjees 'Sunday pictures'



**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**




**இரு மலர்கள் !**